Fachstelle Frühe Kindheit

**FACHSTELLE**
**FRÜHE KINDHEIT**
Postfach 1000
CH-8201 Schaffhausen
T + 41 52 632 53 51
www.stadt-schaffhausen.ch
www.fk-stsh.ch

ஷாஃப்ஹவுசன், பிப்ரவரி 2024

**ஷாஃப்ஹவுசன் நகரில் உள்ள ஆரம்பகால ஜெர்மன் மொழி (Frühe Deutschförderung) பயிற்சி ஆதரவு**
**மழலையர் பள்ளியில் நுழைவதற்கு முன் மொழி திறன்**

அன்புள்ள பெற்றோர்களே
அன்புள்ள பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களே

கடந்த ஆண்டு உங்கள் குழந்தையின் மொழி மதிப்பீட்டிற்கான (Sprachstanderhebung) கேள்வித்தாளை பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்பினீர்கள். மிகவும் நன்றி!

அப்போதிலிருந்து உங்கள் குழந்தையின் ஜெர்மன் மொழி திறன் கள் எவ்வாறு வளர்ந்துள்ளன என்பதை அறிய நாங்கள் இப்போது ஆர்வமாக இருக்கிறோம்.

எனவே நீங்கள் மீண்டும் அதே கேள்வித்தாளைப் பெறுவீர்கள். இது உங்கள் குழந்தையின் தற்போதைய ஜெர்மன் அளவை மதிப்பிட அனுமதிக்கிறது. எனவே **29 பிப்ரவரி 2024** க்குள் கேள்வித்தாளை ஆன்லைனில் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கேள்வித்தாள் 14 மொழிகளில் கிடைக்கிறது:

**உங்கள் குடும்ப மொழி சுவிஸ் ஜெர்மன் மொழியா அல்லது வழக்கமான ஜெர்மன் மொழியா?** எதுவாக இருந்தாலும் கேள்வித்தாளை நிரப்பலாம்
ஒவ்வொரு குழந்தையும் தனக்கென உரித்த பாணியில் தனக்குரிய வேகத்திலும் பேசக் கற்றுக கொள்கிறது. இந்த ஆய்வு உங்கள் குழந்தைக்கு உபயோகமாக இருக்கும்.

**காகித கேள்வித்தாளைப் பயன்படுத்த விரும்புகிறீர்களா?** நீங்கள் கேள்வித்தாளை வலைத்தளத்திலும் பதிவிறக்கம் செய்யலாம் www.fk-stsh.ch இல் பதிவிறக்கவும்.

உங்கள் குழந்தையின் மழலையர் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஜெர்மன் மொழியை இரண்டாவது மொழியாக (Deutsch als Zweitsprache, DaZ) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உங்கள் குழந்தையின் மொழித்திறன்பற்றி தெரிவிக்கப்படும். இதன் மூலம் ஆசிரியர்கள் பாடங்களை சிறப்பாக திட்டமிட இயலும் மற்றும் உங்கள் குழந்தை பாலர் பள்ளியில் (Kindergarten) உகந்த முறையில் பயனடைய முடியும். கேள்வித்தாளை பூர்த்தி செய்து திருப்பி அளிப்பதன் மூலம், இந்த தகவல் பரிமாற்றத்திற்கு நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.

உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், கேள்வித்தாளை நிரப்புவதில் உங்களுக்கு உதவ நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

உங்கள் மதிப்புமிக்க ஒத்துழைப்பிற்கு மிக்க நன்றி!

தங்கள் உண்மையுள்ள

M. Vock

மிர்ஜாம் வோக்
குடும்ப உளவியலாளர்
தொலைபேசி +41 52 632 53 63
mirjam.vock@stsh.ch